OCT 1926

539

# ஸ்ரீ மகா சித்தர் கணங்களின்மீ சோடச வந்தாதியும், ஸ்ரீ பரம சற்குரு தரிசன சரித்திரமும்.

…கலட் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயம்

…பகார வித்தியாதன சபை.

18-உ அக்டோபர் 1926.

42:4198 N26 176822

உ

ஓம்!

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ குருப்யோ நம:

நீலகிரி திருக்காந்தல் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலய மூலகர்த்தாக்களாம், பரமஹம்ஸ ஸ்ரீமத் ஏகாம்பர தேசிக ஸ்வாமிகள், சித்தீஸ்வரி ஸ்ரீமதி இரத்தினம் அம்மணி தேவியார், அவர்களின் ஏழாவதாண்டு சமாதி பூஜை ஞாபகார்த்தமாய் பஹிரங்கஞ் செய்த

# ஸ்ரீ மஹா சித்தர் கணங்களின்மீது சோடச வந்தாதியும் ஸ்ரீ பரம சற்குரு தரிசன சரித்திரமும்.

---

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாது சம்ரக்ஷணை சங்கத்தாரும், இரங்கூன் நிவாசகர் வேலநகர் ஸ்ரீமான் கோ. அப்பா துரை சிங் அவர்களின் விருப்பின்படியும்; ஓம் அசல பீடம் நீலகிரி சோலாடா தேவர்பேட்டா குகாவாசி ஸ்ரீ சுவாதீனப் பிரகாஷ் ஸ்வாமி பொன்னுசாமி அவர்களால் இயற்றி 1926-ஹு அக்டோபர்-மூ 18-உ நீலாசலம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மடாலயத்தில் ஸ்ரீ உலோகோபகார வித்தியாதன சபையாரால் அரங்கேற்றப்பட்டது..

உ

ஓம்!

ஸ்ரீ மஹா சித்தர்களாம் பிரஹ்ம வேதாக்களின்

# விண்ணப்ப சோடச வந்தாதி.

---

மலருயர் மணங்கமழ் வனமலை குகைவளர்
மன்னரைத் ரேயர் தித்திரி
சுலமுயர் கௌஷீதஹி சுவேதா சுவசரா
கூருமா தித்தியர் கடரும்
நலமுய ராருணி பிப்பலா தியரொடு
நற்பிரஜா பதிய தர்வர்
பலமுள ருஷிகளாம் ப்ரஹ்மவே தாக்கள்
பதங்களே நமவோம் நமவே.

நமவென் றுமதருங் கழற்களே கதியென
நம்பினேந் துருகிடு மன்பர்
அமலமே யாகவே வாங்கனே வுதயமாய்
யரவணைத் தாட்கொளு மாப்போல்
தமகுண மூடனுந் தங்களைத் தொழுதிட
தன்னருட் கருணையைப் போர்ந்து
உமதுட வினமே சேர்ப்பதும் பரமே
ஓம்யோ கீஸ்வராள் போற்றி.

போற்றிடு நியமமே வறிகிலாக் கடையன்
புன்மையன் காமதுட் குரோதன்
ஏற்றசன் மார்க்கமன் நெறியிலாக் கொடிய
யிதயினன் வினையினன் பக்தி
ஆற்றலே சற்றிலா வந்தக னெனவே
வகற்றியே கைவிடு வீரேல்
சாற்றுபாழ் நரகினி லழிவதல் லாமல்
சார்துணை யாரினி யுலகே.

176822

O2:4198
N26

உலகினுக் குதவிலாப் பிள்ளையே யாயினு
முற்றதாய் தள்ளன் முறையோ
நிலமிசை சுற்ற ருற்றே ருமைவிட
நிலையா தரவுவே நிலையால்
மலமிகப் பேயெனின் மகிபரே யிரங்கிடில்
மாற்றிட லாகுமே சேயன்
நலமுறத் தரிசனந் தாருமே சரணம்
நவீனு நந்தபே ரொளியே.

ஒளிநிறை தங்கமா யோட்டினை யாக்குவீர்
ஊரினி லிரந்துண் பவரை
களிநிறை யரசருக் கரசராய்ச் செய்குவீர்
கடுங்கொலை கள்வர்க டம்மை
வெளிநிறை சாட்சியாய் வீற்றிட வைப்பீர்
வேணசித் திகளெலாம் வல்லீர்
எளியனேன் குறைகளை நீக்குவ தருமையோ
யிரட்சியும் பிரஹ்மதே சிகரே.

தேசிக வேந்தரே ஜீவகா ருண்யரே
தீவினை பயனுன் னாளும்
பேசிடும் மிகப்பொலா பிறப்பிறப் பென்னு
பெருந்துயர் கடலின் னுயேன்
தூசிபோற் சிக்கியே சுழன்றலைந் துழல்வது
தூயநீ ரறியா தலவே
மாசிலா சுகந்தனை மகிழ்வுட னுதவிட
வருகுவீர் பிரபுகாள் ததிஓம்.

ஓம்சித் தாதிகாள் உயர்திகம் பரர்காள்
ஓம் ஓம் ஓம் ஓம் அபயம்
ஓம்வே தாந்திகாள் உன்னத ஞானிகாள்
ஓம் ஓம் ஓம் ஓம் அபயம்
ஓம்தே வாதிகாள் உகந்தபுங் கவர்காள்
ஓம் ஓம் ஓம் ஓம் அபயம்
ஓம்மூ தாதைகாள் உத்தம தபசிகாள்
ஓம் ஓம் ஓம் ஓம் அபயம்.

அபயமோ மபயமே ஆத்மா ஈந்தரே
அபயமோ மதிபரே பாரும்
அபயமோ மபயமே ஆருயிர்க் கிறைவரே
அபயமோ மன்பரே சாரும்
அபயமோ மபயமே ஆப்தச காயரே
அபயமோ மசலரே காரும்
அபயமோ மபயமே ஆட்கொளுந் தீரரே
அபயமோ மருள்கசுந் திரரே.

சுந்திர பூபரே தஞ்சமே தஞ்சம்
சுயமுனீஸ் வரர்களே தஞ்சம்
சந்திர ரூபரே தஞ்சமே தஞ்சம்
சதாருஷீஸ் வரர்களே தஞ்சம்
இந்திர மாதரே தஞ்சமே தஞ்சம்
ஈஸ்வரி தாய்களே தஞ்சம்
மந்திர வீரரே தஞ்சமே தஞ்சம்
மஹாசித் புருஷரே தஞ்சம்.

தஞ்சமென் றண்டிய குழந்தைமுன் சாந்தரே
தயவுவைத் தருகினிற் றேன்றி
அஞ்சலென் றோர்மொழி யளித்திடு வீரேல்
அல்லவி னின்றகன் றேழை
பஞ்சமே யொழித்து பரமவீ டடைந்து
பாக்கிய வந்தனு வதற்கு
கிஞ்சிற் றையமே யில்லையா தவினுற்
கிருபைகூர் மாட்சியுற் றோரே.

மாட்சிசூழ் தாட்களை வருடியே வணங்கிட
வனங்களா றுகளெலாங் கடந்து
திட்சித கிரியொடு பததளம் நாடியே
தேடியுங் கூடியே யழுதுங்
காட்சிசூழ் மூர்த்தமாய் வெளிப்பட வில்லையே
காலமுங் கழியுதே ஐயகோ!
மோட்சநல் வழிதனை காட்டிட வேணுமே
முக்தரே வுமதடைக் கலமே.

அடைக்கல மென்றுளம் வாக்கொடு யாக்கையு
　　மர்ப்பணம் பண்ணியுஞ் சற்றுங்
கடைக்கணு ராதசேன் சாயமோ நீர்க்குமிழ்
　　கனதன வாழ்வெலாங் கனவே
தடைசெயு மகவிரு ளகற்றியே வகண்டித
　　சச்சிதா நந்ததத் பதமாய்
இடையரா திலங்கிடு மின்பமாந் தன்மையை
　　யீன்றிட தருணமு மீதே.

ஈதுபோ திருந்தவர் நாளைபோ திருப்பரென்
　　றியம்பவோ வுறுதியு மில்லையே
ஏதுநா ளுமதுநல் லநுக்ரகம் வாய்க்குமோ
　　வெனமனங் குமுறுதே யந்தோ
ஓதுமித் தேகமு மெடுத்ததின் பயன்வீண்
　　ஊழலா போகுத லழகோ
போதுமிச் சன்மமே புரியுமோர் தன்மமே
　　பூரண மாகிடத் தானே.

தாளு தன்னையே தானுணர் வதுமற
　　தாஞ்செத் திருக்கவு மருள்வீர்
நீளு ணிரண்டிலா வேகவத் வைதமாம்
　　நித்திய கடாட்சமு மருள்வீர்
நாளு விதந்திரி கரணமு மொடுங்கியே
　　னனவிற் சுழுத்தியு மருள்வீர்
மோளு சொரூபநற் றுரியா தீதமாய்
　　மூழ்கவுந் ததாஸ்தென அருள்வீர்.

அருள்பொழி தெய்வமாய் விளங்கிடு முமதடிக்
　　கன்புபூண் டொழுகவே வேண்டும்
பெருமைசேர் போதமா காரபே ரறிஞரின்
　　பிரிவிலா நட்புமே வேண்டும்
திருவளர் ஓம்அசல் பீடமுந் தழைத்தே
　　சிறப்புபெற் றிருக்கவே வேண்டும்
குருஓம் பிரகாஷ் சுவாமிக ளாசீர்
　　குறைபடா தோங்கவே வாழி.

வாழிமா சித்தரும் சித்தீஸ்வரிகளும்
வாழிமா ருஷிகளும் வாழி
வாழிமா யோகிகள் யோகினி மார்களும்
வாழிமா முனிவரும் வாழி
வாழியே காம்பரர் இரத்தின வம்மையும்
வாழிமா ஓம்குரு வாழி
வாழிமா முத்தருஞ் சர்வஜீ வர்களும்
வாழியே வாழிஓம் மலரே!

---

உ

ஓம்!

ஸ்ரீ கணேசாய நம:

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ முமுக்ஷுவுக்கு ஸ்ரீ பரம சற்குரு பிரசன்னமான சரித்திரம்.

---

குரு ஸ்துதி—வெண்பா.

"நிற்குணனாய் நித்தியனாய் நின்மலனாய் நிச்சலனாய்
சற்குருவே யானசௌ பாக்கியனை—மற்புதனை
வாக்குத் துதிக்க மனநினைக்க வென்சிரத்தி
லாக்கவவன் பொற்பதமே யாம்."

" ஸ்ரீ கயிலாச பதியாகிய தக்ஷிணாமூர்த்தியினனுக்கிரஹம் பெற்று விளங்கிய சனற்குமார ரிஷி, அவர் சீஷர் அத்திரி மகா ரிஷி, அவர் சீஷர் அடிசாய்கையில்லார், அவர் சீஷர் சுவாயம்புவ சித்தர், இவர்களெல்வரும் ஸ்ரீ கயிலாயத்திலுங் காசியிலுஞ் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற காலத்தில் சாந்த பட்டணத்திலாரிய வம்சத்திற் பிறந்த ஆரியரென்பவர் தபோ சித்தராய் வாணிபத் துறையிலிருந்து அவ்விடத்தில் பிரஹ்ம ஞான சித்தராயிருக்கிற சில மகாத்துமாக்களுடன் கூடி வே

தாங்க விசாரம் பண்ணி வருகிற நாளில் ஒரு நாள் அவ்வாரியர் எழுந்து அவர்களுக்கு பூஜை நமஸ்காராதி சர்வோபசாரமும் செய்து அஞ்சலியஸ்தராய் நின்று, ஒய்! மகாத்துமாக்களே! நீங்கள் வஸ்துவை விசார ஞானத்தினால் அறியும் வழி மாத்திரம் திருவுளம்பற்றியருளினீர்கள்; இது சிரவண மனன மாகிய பரோட்சமான வபர ஞானமன்றி நிஷ்டா பூர்வசமா யறிந்தனுபவிக்கின்ற சுவானுபவமாகிய அபரோட்சமான பர ஞானமல்லவே அந்த சுவானுபூதி நிலைமை அடியேனுக்கு சித்திக்கும்படி கிருபை கூர்ந்தருள வேண்டுமென்று பலவா றுகத்துதித்து விண்ணப்பஞ் செய்தருளினார்.

அதுகேட்ட மகாத்துமாக்கள் அவரை கிருபையாகப் பார்த்து ஒய்! ஆரியரே! அவாங்மனோகோசரமாகிய சுக சமாதி நிஷ்டானுபவமுணர்ந்த மகான்கள் கிடைப்பதுந் துர்லபம் அதற்குரிய சாதன சதுஷ்டய சம்பன்னரான வதிகாரிகள் கிடைப்பதுந் துர்லபமேன்று சொல்லியருளினார்கள் அந்தச் சொல்லைக்கேட்டமாத்திரத்தில், ஆரியர் மிகவும் நடுக்குற்று நமக்கு இப்படிப்பட்ட நிலைமை யெப்படி கிடைக்கப்போகிற தென்று வியாகூலமடைந்து நாம் இந்த நிச்சயத்தை எந்த வகையினாலாவதடைய வேண்டுமென்கிற வைராக்கியத்தை மேற்கொண்டு தாமிருக்கும் வாணிபத்துறைக்கு தமது புத்தி ரர்களை வைத்துவிட்டுக் கங்கா நதி சூழ்ந்த காசி பட்டணமே போய் விசுவநாதருடைய ஆலயத்திற் புகுந்து பலமுறை வணங்கி நின்று, அப்பால் மகாராஜ ராஜ பரமேஸ்வரியாகிய விசாலாட்சியம்மையாரை யுபாசித்து அந்த மகா தேவிக்கு திரி சந்தி காலமும் சுகந்தாதி புஷ்ப மாலிகை தூப தீப நை வேதன முதலிய சர்வோபசாரங்களும் வழுவாது நடத்திக் கொண்டு தினந்தோறும் பூஜை முடிந்த பின், பூமியை சதுர மாய் மெழுகி அதிலிருந்து மாமுதலிய வாகாரங்களை யுண்டு, மூன்று வருட பரியந்தம் அல்லும் பகலும் அஃதே சிந்தனை யாய் மகா வைராக்கியத்துடன் அந்தச் சன்னிதானத்தில் வசித்திருந்தார்.

இப்படியிருக்க ஒரு நாள் மகா தேவியார் திருவுளமிரங்கி அப்பா ஆரியா! நீ இருக்கும் இடத்திற்கு போனாலவ்விடத்

தில் உனக்கு வேண்டிய வரங் கிருபை செய்கிறோம் என்று அசரீரியாய்க் கட்டளையிட்டருள, அதைக்கேட்ட ஆரியர் வியாகூல நீங்கி மனமகிழ்ச்சி யடைந்து, மகா பாக்கியம் மகா பாக்கியம் என்று எழுந்து, பலமுறை வணங்கி பிரதட்சண நமஸ்காரஞ் செய்து விசாலாட்சி தாயாரிடத்தில் விடைப்பெற்றுக் கொண்டு, விசுவநாதர் சந்நிதியையும் வணங்கிக்கொண்டு, வெளியேப் புறப்பட்டு தமது வாசஸ்தலத்தை நோக்கி நடந்து வரு மார்க்கத்தில் ஒரு சோலையும் தடாகமுங் கண்டு மகா சந்தோஷத்துடன் அந்தச் சோலையிலிறங்கி ஆயாசம் நீங்கி, அநுபாசமாய் சுயம்பாகஞ் செய்து வைத்து அனுஷ்டானுதிக் கிரியைகளை முடித்துக்கொண்டு, தாம் அமுது கொள்ள வேண்டி அதிதி பிட்சைக்கு அமுதெடுத்து வைக்குந் தருணத்தில் மகா தபோதனராகிய ஒரு விருத்தர் அவ்விடத்திற் கெழுந்தருளினர்.

அங்ஙனம் எழுந்தருளிய மகாத்துமாவை ஆரியர் கண்டு வணங்கி, தேவரீர்ந்த வமுது கைக்கொள்ளுமென்று பிட்சையை அவர் கையிற் கொடுக்க, அவர் பிட்சையை வாங்கிக் கொண்டு தமது கையிலிருக்குந் திருமுறையை ஆரியர் கையிற் கொடுத்துவிட்டு அமுது கொண்டருளி வருகிறோமென்று தடாகக் கரையே போய் மறைந்தருளினர்.

அப்பால் ஆரியர் மகா சந்தோஷகரமாய் போஜனஞ்செய்து, பின்பு தடாகக் கரையில் அதிதியைக் காணுமையால் எங்குந் தேடி திரும்பி வந்து அந்த திருமுறையை அவிழ்த்துப் பார்த்தருளினர். அது மகா வாக்கிய சம்பிரதாயமாயிருந்தது. அதைக்கண்டு ஆரியர் மகா ஆனந்தத்துடன் அதைப் பிராணதாரமாய்க் கைப்பற்றிக்கொணடு தமது வாசஸ்தலத்திற்கு வந்து சேர்ந்து சார்வதா அந்தத் திருமுறையைச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அப்படியிருக்கச் சிலநாள் சென்றபின்பு இந்தத் திருமுறையிற் சொல்லுகிற நிஷ்டானுபூதி நமக்கனுபவமாகும்படி, சந்தேக விபரீதமின்றி போதிக்கவல்ல ஆசாரியரை யறிந்து சரணுகதியடையவேண்டும் என்கிற தாகத்துடன் புறப்பட்டு, சற்குருவைத் தேடி முன்போலவே காசிக்குப்போய், விசா

லாட்சி யம்மையார் சந்நிதானத்தில் சில நாள் வசித்திருந்தார். அப்படியிருக்க அவர் ஒரு நாள் மத்தியான வேளையில் ஸ்நானஞ் செய்யும்படி மணிகர்ணிகைக் கரைக்கு வந்து அங்கே முன் திருமுறைக் கொடுத்த மகாத்மாவெழுந்தருளியிருக்க அவரைக்கண்டு வணங்கி ஓய் சுவாமி! தேவரீரித்தனை நாளாய் எங்கே மறைந்தருளியிருந்தீர் இப்போது தேவரீரைக் கண்டவளவில், அடியேன் கவலையெல்லாம் விமோசனமாயிற்றென்று பலவாறாக ஸ்தோத்தியஞ் செய்தருளினார். அதைக்கேட்ட மகாத்துமாவும் அப்பா! நாம் நெடு நாளாய் இந்த ஸ்தலத்தில் தான் குடும்ப வாசமாயிருக்கிறோம்; நமது தேவியும் உன்னை மகா தபோ சித்தனென்று பலகாலுஞ் சந்தோஷமாகச் சொல்லி வருவாள் நாமும் அப்படியே யுன்னைக் குறித்துப் பலகாலமுஞ் சந்தோஷப்படுவோம். நாம் முன்பு உன் கையிற் கொடுத்த திருமுறையெங்கே என்று கேட்டருள, அதைக்கேட்ட வாரியர் ஓய் சுவாமி! கிருபா நிதி! தேவரீரை உடனே எங்கும் தேடிக் காணாமல் மயங்கி பிற்பாடு என் வாசஸ்தலம் போய்ச் சேர்ந்து சிலகாலம் இந்தத் திருமுறையை சிந்தித்துப் பார்த்து, அதன் பொருளை யுணராமல் அதைக் கரதலாமலகம் போல் உபதேசிக்க வல்ல ஆசிரியர் எங்கே கிடைக்கப்போகிறார் என்று, எங்கும் தேடிக் காணாமல் இந்த ஸ்தலத்திற் கிடைப்பாரென்னு முறுதியுடன் சில காலமாயிருக்கும்போது, இந்த நாள் தேவரீரை இவ்விடத்திற் கண்டேன். ஆதலால் தேவரீரே என் கோரிக்கையை நிறைவேற்றி இரட்சிக்கவேண்டுமென்று மகா பய பக்தி விசுவாசத்துடன் அநேக நமஸ்காரஞ் செய்து ஓய் கருணாநிதி! ஞான நேத்திரத்தால் தெரிசிக்கத்தக்க தேவரீரை ஊன நேத்திரத்தாற் றெரிசித்தேனென்று, பலவாறாகக் கொண்டாடி, என்னைச் சனன மரண சாகரத்திலழுந்தாமல் பரிபூரண கடாட்சம் வைத்தருள வேண்டுமென்று அஞ்சலியஸ்தராய் விண்ணப்பஞ்செய்து நின்றார்.

அதைக்கண்ட ஸ்ரீ விசுவேசராகிய மகாத்துமாவும், நீ பயப்படாதேயென்று, அபயாஸ்தங் கொடுத்தருளி, அப்பா! நீ முத்தி மண்டபத்திற்கு போய் அவ்விடத்தில் திகம்பரராய் விதேக கைவல்ய முத்தராய், நிஷ்டானுபவ கேவல அந்தர்

முக விலாசராயிருக்கின்ற சுவாயம்புவ ரிஷியைக் கண்டு அவரைச் சரணமடைந்தால் அவர் உனக்கு ஸ்வரூபஜெஜன்னிய ஞான சிற் சமாதி சாட்சாத்கார வுண்மையை அனுக்கிரகிப் பாரென்று திருவாய் மலர்ந்தருள, அது கேட்ட ஆரியர் சந்தோஷ சித்தராய், சுவாமி! இந்த பாதகன் பொருட்டாய் முத்தி மண்டபத்திலெழுந்தருளியிருக்கிற மகா ரிஷி சுவாமிகள் திருவுளம் பற்றியருளுமோ அருளாதோ அதற்கு தேவரீர் உத்தரவானால் அனுக்கிரகித்தருளுமென்று மகா விநயத்துடன் விண்ணப்பஞ் செய்ய, அதற்கு மகாத்மாவும் அப்பா! நாம் அப்படியே அவருக்கு உன் தீவிர தர பக்குவத்தை தெரிவித்து உனக்கு அனுக்கிரகஞ் செய்யும்படி உத்தரவு செய்கிறோம் அவர் அப்படியே உனக்கு அனுக்கிரகஞ் செய்வார் பிற்பாடு நாம் உன் கையிற் கொடுத்திருக்கிற திருமுறையைப் பதனமாய் நீயே வைத்துக்கொண்டு உன்னைப்போன்ற பக்குவர்களுக்கெல்லாம் நீ அனுக்கிரகஞ் செய் அபக்குவர்களுக் கனுக்கிரகஞ் செய்யாதே, அப்படி பக்குவா பக்குவம் விசாரியாமல் அனுக்கிரகஞ் செய்தால் அதிகப் பாதகனைப் போவாயென்று திருவுளம் பற்றியருள; அது கேட்ட ஆரியர், அந்த வசனத்தை மகா பிரசாதமென்று சிரசா வகித்துக் கொண்டு, ஓய் சுவாமி! தேவரீர் இருக்கும் ஸ்தலத்தையும் தேவரீரது பத்தினியாகிய தேவியாரையும் தெரிசிக்கும்படி கிருபை செய்யவேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்.

அது கேட்ட விசுவேசரும் அப்பா! நல்லது வாவென்று ஆரியரை தம்மோடழைத்துக்கொண்டு விசாலாட்சி யம்மையார் சந்நிதிக்குப்போய் இது தான் நமது கிரகம் இவள் தாம் நமது தேவியென்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தியானமாய் மறைந்தருளினர்.

அப்பால் ஆரியர் அவ்வதிசயத்தைக் கண்டு, திகைத்து நின்று வேத வேதாந்த சொரூபா! விசுவேஸ்வரா! சமஸ்த ஜகதாதாரா! சர்வலோக சரண்யா! ஜகத் ரக்ஷகா! வென்று பலவாறுக தோத்திரஞ் செய்து ஓய் சுவாமி! தேவரீரது திருப்பாதம் வருந்தப் பாவியேன் பொருட்டு பூமியின் கண்ணெழுந்தருளி வந்தக் கருணைக்கென்ன கைம்மாறு செய்வேனென்று பித்தேறினவர் போல விசாலாட்சி யம்மையார் சந்

176822

நிதானத்திற்கும் மணிகர்ணிகைக் கரைக்குமாய்ப் புரண்டு புரண்டு மருண்டு மருண்டு விழுந்தெழுந்து, தேகாதி பிரபஞ்சத் தோற்றரவின்றி உன்மத்தங் கொண்டு திரிகிற நாளில் ஸ்ரீ விசுவநாத சுவாமியும் ஒரு வயோதிகப் பிராமண சந்நியாசப் போலத் திருவுருக்கொண்டு சுவாயம்புவ மகரிஷிக்குமுன் யெழுந்தருளி வந்து, ஓய் சுவாயம்புவ மகரிஷியே! க்ஷேத்திரா திரிசியத்தை மேனோக்கிக்கொண்டு நன்றாய்த் தலைகீழாக நிமிர்ந்து கிடக்கின்றாய், புரண்டு விழுந்து பித்தாய்த் திரிகிறவனைப்பார்த்து, ஆதரித்து உனக்கென்ன வேண்டியதென்று கேட்டால் பழுதோ? ஜீவ காருண்யத்திலும் சமாதியதிகமோ, இனியாகிலும் போய் அவனை யாதரித்து அவனுக்கிந்த சமாதி நிலைமையை உபதேசஞ் செய்யென்று சொல்லி மறைந்தருளினார்.

அப்பால் அதைக்கேட்ட சுவயம்புவ மகரிஷியும் மகா பயங்கரத்துடன் நடுக்கங்கொண்டு திடீலென்றெழுந்திருந்து ஆரியரிடத்திற்கு வந்து, அப்பனே! ஏன்? துயரப்படுகிறாய் உனக்கு வேண்டிய தேதென்று கிருபையாகக் கேட்டருளினார். அவ்வாரியரும் அவ்வசனாமிர்தமானது செவியினிடமாகப் புகுந்த மாத்திரத்தில மனோ வெப்பம் நீங்கி விஸ்ராந்தியடைந்து ஓய் சுவாமி! தேவரீருடைய தெரிசனமானது, வடவாலின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற தக்ஷிணாமூர்த்தியே குரு மூர்த்தமாய் எழுந்தருளி வந்து, ஜனன மரணமாகிற துக்க சமுத்திரத்திலழுந்திக் கிடக்கின்ற அடியேனையெடுத்து ஞானாமிர்தத்தினால் நனைத்து ஸ்வஸ்வ ரூபானந்தவதி சீதளமாக்கிக் கரையேற்றினது போலிருக்கிறதென்று சாஷ்டாங்க தண்டம் பண்ணி இரண்டு திருவடித் தாமரைகளையும் ஆனந்த பாஷ்பத்தினால் அபிஷேகஞ் செய்து. நாத்தழுதழுக்கத் தோத்திரஞ் செய்து, இரண்டு கைகளையும் சிரசின்மேற் குவித்துக்கொண்டு அஞ்சலியஸ்தராய் நின்றருளினார்.

4198 N26

அதை சுவாயம்புவ மகரிஷியும் கிருபையாகப் பார்த்து, அப்பா! வாவென்று ஆரியரை முக்தி மண்டபத்திலழைத்துக்கொண்டுபோய் உபதேசிக்கும் முறைமைப்படி அறியுந் திருவடி, அறுதித்திருவடி தீட்சையும் செய்து மகா வாக்கியமாகிய ஒரு மொழியையும் சமாதி நிஷ்டா சாம்பிரதாயமும், உபதே

சித்தருளினர். அங்ஙன முபதேசித்த மாத்திரத்தில் ஆரியரும் அந்தர் முகப்பட்டு ஸ்வஸ்வரூப சமாதி யடைந்து, அங்ஙனே நெடுநாளிருந்து பின்பு சொரூபாகாரமாகவே சமாதியினின் றும் விழித்து எதிரே கண்ட குரு சுவாமிகளது உபய சரணாரவிந்தங்களை பூஜித்து, தமது உடல் பொருளாவி மூன்றையும் குரு சந்நிதானத்தில் தத்தஞ் செய்தருளினர்.

அது கண்டு சுவாயம்புவ மகரிஷியும் அவ்வாரியருக்கு புஷ்பகிரி சுவாமிகளென்று தீக்ஷா நாமங் கொடுத்து; அப்பா! கோதாவரிக் கரையில் சோமஸ்கந்தமென்னுந் தலத்திலெழுந்தருளியிருக்கும் சோமஸ்கந்தர் நமக்கிஷ்ட தேவதையாகையால், நீ அங்கே போயிருந்து உன்னைபோலொத்த பக்குவர்களுக்கு இந்த சமாதி சாம்பிரதாயத்தை உபதேசஞ்செய்து ஜீவன் முத்தனாய் வாழக் கடவாயென்று ஆசீர்வதித்து அங்ஙனமின்றி அபக்குவர்களுக்கு உபதேசிப்பாயாகில வியர்த்தமாகிப்போமென்று, திருவுளம் பற்றியருளி ஆரியருக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு; சுவாயம்புவ மகரிஷியும் ஸ்ரீ கயிலாயத்திற்கு எழுந்தருளினர்.

அப்பால் ஆரியராகிய புஷ்பகிரி சுவாமிகள் விசுவநாதரையும் விசாலாட்சி தாயாரையும் வணங்கி விடை பெற்றுக் கொண்டு, குருவாக்கியப்படி சோமஸ்கந்த மென்னுந் தலத்திலெழுந்தருளியிருந்து தம்மையடுத்து வந்த பக்குவர்களாகிய பயிர்கள் தழைத்து வளரும்படி ஒரு வைகம்மாறம் வேண்டாது மேகம்போல ஞானமிர்தத்தை சதா காலமும் வருஷித்துக் கொண்டிருந்தது."

இவ்வண்ணே பரம சற்குரு பகவானை வந்தித்து, ஜனன மரண பாதையினின்று விடுபட அமுர்தானந்த மகா வாக்கிய ஔஷதத்தைக் கிருபை பாலிக்கச் சிந்தித்து, திருவருள் பிரசாதம் கைவல்யமாம் பேற்றினைப் பெற்ற பரமஹம்ஸ ஸ்ரீமத் ஏகாம்பரதேசிக ஸ்வாமிகள், சித்தீஸ்வரி ஸ்ரீமதி இரத்தினம் அம்மணி தேவியார் திருப்பாத கமலங்களை சதா ஸ்மரணாத்தியஞ் செய்து அகண்டாகார சச்சிதாநந்த பிரஹ்ம சொரூபமே பாரமார்த்திக சத்தென எக்காலத்திலும் உள்ளதாக சுவானுபவமாய்க் கண்டுய்வோமாகுக.

ஓம் தத் ஸத்.

126822